**அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை**

Ang Mo Kio Tamil Methodist Church

***26th ஜூலை / July 2026 ஞா யிறு ஆராதனை / Sunday Service***

| | |
|---|---|
| ✝ **ஆராதனைக்கு அழைப்பு**<br>Call to Worship | **திருமதி. பௌலினா ஜேம்ஸ்**<br>Mrs. Paulina James |
| **இறைவணக்கப்பாடல்**<br>Introit | **பாடகர் குழு**<br>Choir |
| **ஜெபம்**<br>Prayer | **திருமதி. பௌலினா ஜேம்ஸ்**<br>Mrs. Paulina James |
| ✝ **தொடக்க பாடல்**<br>Opening Song | **சபையார் இணைந்து**<br>Congregation |

**கர்த்தாவே, யுகயுகமாய்**

*1. கர்த்தாவே, யுகயுகமாய்*
*எம் துணை ஆயினீர்;*
*நீர் இன்னும் வரும் காலமாய்*
*எம் நம்பிக்கை ஆவீர் .*

*2. உம் ஆசனத்தின் நிழலே*
*பக்தர் அடைக்கலம்;*
*உம் வன்மையுள்ள புயமே*
*நிச்சய கேடகம்*

*3. பூலோகம் உருவாகியே,*
*மலைகள் தோன்றுமுன்,*
*சுயம்புவாய் என்றும் நீரே*
*மாறா பராபரன்.*

*4. ஆயிரம் ஆண்டு உமக்கு*
*ஓர் நாளைப்போலாமே;*
*யுகங்கள் தேவரீருக்கு*
*ஓர் இமைக்கொப்பாமே.*

| | |
|---|---|
| ✝ **மாறி வாசித்தல் *30*ம் ஞாயிறு**<br>***"சங்கீதம் 96"*** | **சபையார் இணைந்து**<br>Congregation |

**"கர்த்தருக்குப் புதுப்பாட்டைப் பாடுங்கள்"**

Psalter Reading – "Psalm 96"

| | |
|---|---|
| ✝ **தந்தை போற்றி**<br>Gloria Patri | **சபையார் இணைந்து**<br>Congregation |
| **துதி ஆராதனை**<br>Singspiration | |
| **சாட்சியின் நேரம்**<br>Time of Testimony | |
| **ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்**<br>Thanksgiving & Pastoral Prayer | |
| **பரமண்டல ஜெபம்**<br>Lord's Prayer | **சபையார் இணைந்து**<br>Congregation |
| **சிறப்புப் பாடல்**<br>Special Song | **பாடகர் குழு**<br>Choir |
| ✝ **காணிக்கைப் பாடல்**<br>Offertory Song | **சபையார் இணைந்து**<br>Congregation |

**அநாதி தேவன் உன் அடைக்கலமே**

**அநாதி தேவன் உன் அடைக்கலமே**
**அவர் நித்திய புயங்கள் உன் ஆதாரமே**

**இந்த தேவன் என்றென்றுமுள்ள**
**சதா காலமும் நமது தேவன்**
**மரண பரியந்தம் நம்மை நடத்திடுவார்**

*1. காருண்யத்தாலே இழுத்துக்கொண்டார்*
*தூய தேவ அன்பை*
*இவ் வனாந்தரத்தில் நயங்காட்டி உன்னை*
*இனிதாய் வருந்தி அழைத்தார். - இந்த*

*2. கானக பாதை காரிருளில்*
*தூய தேவ ஒளியே*
*அழுகை நிறைந்த பள்ளத்தாக்குகளை*
*அரும் நீரூற்றாய் மாற்றினாரே – இந்த*

*3. கிருபை கூர்ந்து மனதுருகும்*
*தூய தேவ அன்பே*
*உன் சமாதானத்தின் உடன்படிக்கைதனை*
*உண்மையாய்க் கர்த்தர் காத்துக்கொள்வார் – இந்த*

*4. இப்புவி யாத்ரை கடந்திடுவாய்*
*தூய தேவ தயவால்*
*கடும் கானகத்தில் கர்த்தர் மார்பினிலே*
*கிடைக்கும் இளைப்பாறுதலே – இந்த*

*5. வறண்ட வாழ்க்கை செழித்திடுதே*
*தூய தேவ அருளால்*
*நித்திய மகிழ்ச்சி தலைமேல் இருக்கும்*
*சஞ்சலம் தவிப்பும் ஓடிப்போம் – இந்த*

*6. ஆனந்தம் பாடி திரும்பியே வா*
*தூய தேவ பெலத்தால்*
*சீயோன் பர்வதம் உன்னைச் சேர்த்திடுவார்*
*சந்ததம் மகிழ்ச்சி அடைவாய் - இந்த*

✝ **பூலோகத்தாரே யாவரும்** — **சபையார் இணைந்து**
Doxology — Congregation

✝ **திருமறைப் பாடம்** — **திருமதி. பாலின்**
Scripture Reading — Mrs. Paulin
***எஸ்தர் 9 : 20 – 32***
Esther 9 : 20 - 32

**அருளுரை** — **மறைதிரு. விஜய் ஜோஸப்**
Sermon — Rev. Vijay Joseph

✝ **அர்ப்பணகீதம்** — **சபையார் இணைந்து**
Offertory & Closing Song — Congregation

**தலைமுறையாய் என்றென்றுமாய்**

**தலைமுறையாய் என்றென்றுமாய்**
**தேவன் எம் அடைக்கலமானவரே**
**தஞ்சம் அவரே திரும்பிடுவோம்.**

*1. பூமி உலகம் உருவாகுமுன்னே*
*ஆமிவர் அநாதி பிதா*
*நேற்றுக் கழிந்த நாள் போலவர்முன்*
*நீண்ட ஆயிரம் ஆண்டுகளே – தலைமுறையாய்*

*2. காலை முளைத்து பூத்திடும் புல்லே*
*மாலை நேரம் உலர்ந்திடுதே*
*வாழும் மனிதர் நாட்கள் மறையும்*
*வெள்ளம் போல் எம்மை வாரிக்*
*கொள்வார் – தலைமுறையாய்*

*3. உந்தன் முகத்தின் வெளிச்சத்திலே நீர்*
*எந்தன் பாவம் நிறுத்தினீரே*
*தேவ கோபத்தால் மாயக் கதைபோல்*
*பாவ வருடங்களைக் கழித்தோம் - தலைமுறையாய்*

*4. எங்கள் வாழ்நாள் எழுபது ஆண்டே*
*எண்பதாண்டோ பெலன் இருந்தால்*
*ஞான இதயம் தேவ உணர்வும்*
*நாட்கள் எண்ணிட போதித்திடும் - தலைமுறையாய்*

*5. கர்த்தரே நீர் திரும்பியே வாரும்*
*கோபம் நீங்கி பரிதபியும்*
*துன்பம் அடைந்த நாட்கள் பதிலாய்*
*இன்ப மகிழ்ச்சி ஈந்திடுமே - தலைமுறையாய்*

*6. உந்தன் கிரியை ஊழியர்க்கேதான்*
*உம் மகிமை பிள்ளைகட்கே*
*எங்கள் கரத்தின் நற்கிரியைகள்*
*என்றும் உறுதி செய்தருளும் – தலைமுறையாய்*

**அறிவிப்புகள்**
Announcements

✝ **மனப்பாட வசனம்** — **சபையார் இணைந்து**
Memory Verse — Congregation
***யாக்கோபு 5 : 16***
James 5 : 16

***16. நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது.***

✝ **முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்**
Closing Prayer & Benediction

✝ **ஆசீர்வாதப் பாடல்**
Benediction Song

✝ ***சபையார் நிற்கவும்*** ⁄ Indicates Congregation standing